OS No.38/2017 நாள்: 31.07.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாவித்திரி | வயது | : 55 |
| கணவர் பெயர் | : சிவலிங்கம் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : விளங்காமுடி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

<u>வ.சா.2 ___ சாவித்திரி ஆஜர், குறுக்கு விசாரணை :-</u>

வாதி சிதம்பரம் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு மாமா ஆகவேண்டும். என்னுடைய தங்கையின் பெயர் என்னவென்றால் ஜானகி. என் தங்கை ஜானகியின் கணவர்தான் சிதம்பரம் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதி பொற்செல்வி என்ன உறவுமுறை என்றால் என்னுடைய உறவினர்தான். பிரதிவாதியின் ஆதார் கார்டு, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றில் அவருடைய பெயர் என்னவென்று உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி எவ்வாறு கையொப்பமிடுவார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி நீண்டகாலமாக வட்டிக்கு பணம் கொடுப்பார் எனறு நான் முதல் விசாரணையில் கூறியிருக்கும் நிலையல் எப்போது யார் யாருக்கு பணம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதியின் பெயர் செல்வி என்பது கிடையாது என்றும், அவருடைய பெயர் பொற்செல்விதான் என்றும் அவர் எப்போதும் பொற்செல்வி என்றுதான்

கையொப்பமிடுவார் என்றால் சரிதான். நான் இவ்வழக்கிற்காக பிரதிவாதி கடன் கொடுக்கும் தொழில் செய்தவாக கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு உண்மையிலேயே அந்த கடன் கொடுக்கும் தொழில் செய்திருந்தால் யாருக்கு எப்போது கொடுத்தார் என்று கூறியிருப்பேன் என்றும் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. சிதம்பரத்தின் நிலத்தை எங்கு வைத்து கிரயம் பேசினார்கள் என்று ஏதாவது விவரம் தெரியமா என்றால் தெரியாது. யார் யாரை வைத்து எவ்வளவுக்கு பேசினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் ஏதோ பிரதிவாதி மறுகிரயம் செய்துக்கொடுத்ததாக ஒப்புக்கொண்டதாக இவ்வழக்கிற்காக பொய்யாக கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. டைரியில் குறிப்பு செய்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேனா என்றால் இல்லை. வாதி சுத்த கிரயத்திற்குதான் பிரதிவாதிக்கு விற்பனை செய்தார் என்றும், அந்த நிலத்தை அபரிக்கவேண்டும் என்று வாதிக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொற்செல்வி கிரயம் பெற்றது முதல் அவர்தான் அநத நிலத்தை அனுபவத்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. டைரியில் எனன்னென்ன சிதம்பரம் எழுதியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியின் மனைவியின் அக்கா என்பதால் அவர் போட்டுள்ள மோசடியான வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.